கம்யூனிஸ்ட் தோழர்கள்கூட 'விஜயகாந்திற்கு 50 சீட்டுகளுக்குக் குறையாமல் கொடுக்க வேண்டும்' என்று தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்களாம். காங்கிரஸ் அல்லது தே.மு.தி.க. ஆகிய வியூகத்தில் சிக்கியுள்ள அ.தி.மு.க. முன்னணித் தலைவர்கள் சிறிய கட்சிகளின்பால் அக்கறை காட்டாமல் இருக்கிறார்கள். குறிப்பாக மனித நேய மக்கள் கட்சி பற்றி அ.தி.மு.க. இதுவரை கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. புதிய தமிழகத்தை எடுக்க வேண்டும் என்ற ஆசை அ.தி.மு.க.விற்கு இருக்கிறது. ஆனால் அந்தக் கட்சி வருவதால் இருக்கும் ஓட்டுகளும் பிடுங்கிக் கொண்டு போய் விடுமோ என்ற அச்சமும் இருக்கிறது. இதனால் இரு கட்சிகள் விஷயத்திலும் இன்னும் அ.தி.மு.க. தலைமை ஒரு முடிவிற்கு வராமல் தவிக்கிறது"

"தி.மு.க.வின் நிலை என்ன?"

"தி.மு.க.வோ இப்போதே சிறிய கட்சிகள் குறித்த வியூகத்தை வகுத்து செயல்படுத்தி வருகிறது. முன்பே 'தமிழன் எக்ஸ்பிரஸ்' சொன்னது போல் கொங்கு பேரவையுடன் ஓர் அறிவிக்கப்படாத உடன்பாட்டிற்கு வந்துவிட்டது தி.மு.க. இதை முன்னின்று நடத்தியுள்ளவர் துணை முதல்வர் ஸ்டாலின். கள் இறக்கும் போராட்டத்தில், 'நாடார் சமுதாயத்தில் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் கொங்கு மண்டலத்தில்தான் உரிமையாளர்கள் இருக்கிறார்கள். அந்த உரிமையாளர்கள் நிரம்பிய கொங்கு பேரவையை தங்கள் பக்கம் கொண்டு வந்து விட வேண்டும்' என்று பக்குவமாக வியூகம் அமைத்து வெற்றியும் பெற்று விட்டது தி.மு.க. அந்தப் போராட்டத்தை மனதில் வைத்தே கோவைக்குச் சென்றுள்ள முதல்வர் கருணாநிதி கள் இறக்கும் போராட்டக் குழுவினரை சந்தித்துப் பேசினார். அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் உள்ள பிரதிநிதிகள் இதில் பங்கேற்கவில்லை. ஆனாலும் அ.இ.ச.ம.க. தலைவர் சரத்குமார் மற்றும் நாடார் தலைவர் கரிக்கோல் ராஜ் போன்றவர்களைப் பொறுத்தமட்டில், 'கள் இறக்கும் போராட்டம் மும்முரமாக இருந்தால் இப்போது ஆங்காங்கே கள் இறக்கிக் கொண்டிருக்கும் தொழிலாளிகள் பாதிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் கள் இறக்கிக் கொண்டிருப்பார்கள். போலீஸ் தொல்லை இருக்காது. ஆகவே பேச்சுவார்த்தை ஒரு புறமும், போராட்டம் இன்னொரு புறமும் தொடரட்டும்' என்ற சிந்தனையிலேயே இருக்கிறார்களாம். அ.இ.ச.ம.க.வை எந்த நேரத்திலும் கையில் எடுத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் இருக்கிறது தி.மு.க. வட்டாரம்"



சரத்குமார்



கரிக்கோல்ராஜ்

"வேறு செய்தி ஏதாவது?"

"மத்திய அரசு பணிக்குச் செல்லும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வரிசையில் ஐ.பி.எஸ். அதிகாரிகளும் இப்போது சேருகிறார்கள். குறிப்பாக சென்னை மாநகரப் போலீஸ் கூடுதல் கமிஷனராக இருக்கும் ஷகில் அக்தர் விரைவில் மத்திய அரசு பணிக்குச் செல்லவிருக்கிறாராம்.

இந்த இதழுக்கு இன்னுமொரு செய்தி. சென்னையில் ஆங்காங்கே மசாஜ் கிளப்புகள் இருக்கின்றன. அதில் ஒரு கிளப்பிற்குள் நுழைந்த ஒருவர் பெண் மூலம் மசாஜ் செய்து கொண்டார். அதற்குப் பணம் கொடுக்காமல் வம்பு பண்ணியிருக்கிறார். அது மட்டுமின்றி கூடுதல் போலீஸ் கமிஷனருக்கு ஃபோன் போட்டு, 'இங்கு ஆண்களுக்கு பெண்கள் மசாஜ் செய்கிறார்கள். கேட்டால் இப்பகுதியில் உள்ள டி.சி.க்கு பணம் கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள்' என்று கூறியிருக்கிறார். ஆனால் அப்பகுதியில் உள்ள டி.சி.யோ மிகவும் நேர்மையானவர். அவரைத் தொடர்பு கொண்ட கூடுதல் கமிஷனர், 'உன் பெயரை சொல்லி வசூல் நடக்கிறதாமே' என்று பேச, டென்ஷன் ஆன டி.சி. 'என் மீதே அபாண்ட பழி போடுகிறீர்களா?' என்று கோபப்பட்டு அப்பகுதியில் உள்ள மசாஜ் கிளப்புகள் எல்லாவற்றிலும் ரெய்டு நடத்த உத்திரவிட்டாராம். இதற்கிடையே மசாஜ் கிளப்புகளும் மாநகரப் போலீஸின் லைசென்ஸ் திட்டத்தின் கீழ் வர வேண்டும் என்று அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறாராம் போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன்"

என்ற சாலமன் கோவை மாநாட்டிற்குப் புறப்பட்டார்.